செ. கு. எண்:16 நாள்:22.01.2011

## அடையாறு சுற்றுச்சூழல் பூங்கா திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களது உரை

இங்கே அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பூங்காவிற்கு "தொல்காப்பியப் பூங்கா'' என்று பெயர் சூட்டுகின்றேன். (கைதட்டல்) இந்தப் பூங்காவை இந்த வட்டாரத்து மக்களும், வெளியூர் மக்களும், தமிழக மக்களும் "தொல்காப்பியப் பூங்கா'' என்றே அழைக்க வேண்டும். பழந்தமிழர்களிலும் பழந்தமிழர் தொல்காப்பியர். அவருக்குப் பிறகு தான் வள்ளுவர், மற்ற ஞானிகள் எல்லாம் தமிழகத்திலே தோன்றி நமக்கெல்லாம் ஞானப்பால் வார்த்தார்கள். அத்தகைய முதல் தமிழன், தொல்காப்பியருடைய பெயரை இந்த அடையாறு சுற்றுச் சூழல் பூங்காவிற்கு சூட்டுவதில் நான் பெருமையடைகிறேன். தமிழன் என்கிற பெருமிதத்தோடு, இந்தப் பெயரைச் சூட்டி மகிழ்கிறேன். வணக்கம்.

வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.